
# ஆத்ம ஜோதி




ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி, இலங்கை.



ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே. - சுத்தானந்தர்

ஜோதி 22 | சௌமிய ஸ்ரீ மார்கழி மீ 1ம் உ [15-12-69] | சுடர் 2

# பொருளடக்கம்


| | |
|---|---|
| கடவுள் | 33 |
| மார்கழி மாதம் | 34 |
| குருநானக் | 35 |
| அப்பர் அருளமுதம் — 2 | 39 |
| மரக்கறி உணவும் மாமிச உணவும் | 43 |
| நிலையான நிரை கழலே | 46 |
| ஒன்றே ஒன்று | 50 |
| கந்த ஷஷ்டி | 64 |




## ஆத்மஜோதி சந்தா விபரம்

| | |
|---|---|
| ஆயுள் சந்தா | 100-00 |
| வருட சந்தா | 5-00 |
| தனிப்பிரதி சதம் | 40 |

கௌரவ ஆசிரியர் திரு. க. இராமச்சந்திரா
பதிப்பாசிரியர் திரு. நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி. போன்: 353

# கடவுள்

(குருநானக்)

இதயத்தை தூய்மை செய்து கொண்டால் என்னைக் காண்பாய். என்னைக்கண்டால் இன்பம் பெறுவாய் என்று இறைவன் அருள்கின்றான். கடவுள், பதவி இரண்டிலொன்றைத் தேடுக. இரண்டு தோணிகளில் காலை வைக்காதே.

வண்டு தாமரையில்லாமல் வாழாது. அதுபோல் நான் கடவுளின்றி வாழமுடியாது. கடவுள் ஒருவருடைய சாதி யாது என்று கேட்கமாட்டார். அவன் செய்தது யாது என்றே கேட்பார்.

கடவுளை மறந்தவன் உயிருள்ளபோதே இறந்தவன். கடவுளை இதயத்தில் கொண்டவர்களே அறிவும் பொருளும் பெறுவர். விறகில் நெருப்புப் போலவும், பாலில் வெண்ணெய்போலவும் கடவுள் ஒளி சகல பொருள்களிலும் இருந்து கொண்டிருக்கிறது.

கடவுள் நாமத்தை இதயத்தில் சேமித்துவை. அச்செல்வத்தைத் திருடர் அணுகார். நெருப்பு எரிக்காது; காற்று அசைக்காது. இதயத்தின் உள்ளே ஓடு. ஆம் இதயத்தின் இதயத்தில், அங்குதான் அவன் உளன்.

அனைத்திலும் ஒன்றையே காண்க. இரண்டாவதை எண்ணுவதே உன்னை ஏமாற்றுவதாகும். எவர் இன்பதுன்பங்களைச் சமமாகப் பாவிக்கிறார்களோ அவரே இறைவனைக் காண்பவர்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

# மார்கழிமாதம்

மார்க்க நன்னெறி சென்றிடு மாந்தர்கள்
மூர்க்க மான குணத்தை முனிந்திடும்
போர்க்குறிப்புடைப் புங்கவன் புண்ணிய
மார்க ழியினில் வருக வருகவே.

யோகர் சுவாமிகள்

மார்கழிமாதம் தேவர்களுக்குப் பிரமமுகூர்த்தமாகும். அதனுல் அதனைத் தேவமாதம் என்று அழைப்பர். தேவர் இறைவனை வழிபாடு செய்யும் காலத்தில் நாமும் வழிபாடு செய்தால் இறைவன் அருளை இலகுவில் பெற்றுவிடலாம் என்பது நம்முன்னேர் கண்ட முடிபாகும்.

ஆதலினுல் மார்கழிமாதம் முப்பது நாட்களும் பிரமமுகூர்த்தத்தில் எழுந்து நீராடி, முற்றத்தைக் கூட்டி மெழுகிக் கோலமிட்டுத் தேவர்களை வரவேற்றல் இன்றும் வழக்கத்தில் இருந்துவருகின்றது. மணிவாசகப் பெருமான் காலத்திலே திருவண்ணுமலையிலுள்ள பெண்கள் பிரமமுகூர்த்தத்தில் எழுந்து, தோழிகளையும் அழைத்துக்கொண்டு, எம்பெருமான் நாமத்தைப் பாடியவண்ணம் நீராடச் சென்று, பின்னர் கோயில் தரிசனம் செய்து வந்தார்கள் என்பதை அவர் பாடிய திருவெம்பாவை மூலம் அறிகின்ருேம்.

இதேபோல ஆண்டாள் பாடிய திருப்பாவைமூலம் வைஷ்ணவர்கள் மார்கழிமாத நோன்பு நோற்று கண்ணனைப் பாடி ஆடினுர்கள் என்பதை அறிகின்ருேம். பன்னிருதிருமுறைகளை மாதம் ஒரு திருமுறையாக ஓதுதல் மரபு. எட்டாந்திருமுறையாகிய திருவாசகம் விசேடமாக மார்கழி மாதத்திற்குரியதாகும். மணிவாசகப் பெருமானுடைய திவ்விய சரிதமாகிய திருவாதவூரடிகள் புராணத்தை திருவெம்பாவை பத்துநாட்களும் படித்துப் பயன் சொல்லிவரும் வழக்கம் கோயில்களிலே இன்றும் நடைமுறையில் இருந்து வருகின்றது.

# குருநானக்

(ஆசிரியர்)

★★

இந்தியாவில் இடைக்காலத்தில் சமய மறுமலர்ச்சி ஏற்பட்டது. இராமானந்தர், கபீர் போன்ற அறிஞர்கள் தோன்றி, வைதிக சமயத்தின் குறைகளைக் களைந்து சீர்திருத்தம் செய்ய முற்பட்டனர். இம் மறுமலர்ச்சிகாலத்தில் மலர்ந்த சமூகங்களில் சீக்கிய சமூகமும் ஒன்றாகும். இதைப் பஞ்சாப்பில் தோற்றுவித்தவரே மகான் குருநானக் ஆகும்.

இவரது காலம் 1469—1538 ஆகும். இவர் 1469ல் லாகூருக்கு அருகே உள்ள தன்வந்தி என்னும் இடத்தில் பிறந்தார். இவருக்குக் குழந்தைப் பருவத்திலேயே ஈசுவரத் தியானத்தில் மனம் சென்றது. பக்கிரிகள், சாதுக்கள் ஆகியோருடன் நட்பை நாடினார். ஏட்டுப்படிப்பை விட்டு இதயக் கல்வி கற்றார். சடங்குகளை வெறுத்துச் சத்தியத்தை வலியுறுத்தினார். பையனுக்குப் பைத்தியம் என்று பட்டம் சூட்டினர். கடவுளைக் காணவேண்டுமென்ற பைத்தியம் பிடித்துவிட்டதெனக் கூறினர். பையா, உனக்கு 'நல்ல மருந்து தருகிறேன் என்றார் வைத்தியர். எமபாசம் நீங்க மருந்து தருவீரா என்று சிரித்தார் நானகர்.

மணம் செய்துவைத்தால் இப்பைத்தியம் நீங்கிவிடும் என்றனர் உறவினர். மணம் செய்தும் ஈசுவரப்பைத்தியம் நீங்கவில்லை. எனது நிலபுலன்களை மேற்பார்த்துவா என்றார் தந்தை. எனது ஐம்புலன்களையும் கணப்போதும் தவறாமல் மேற்பார்த்துக் கொண்டுதானே வருகிறேன் என்றார் நானக். உலகெலாம் உழுது நட்டாலும் ஒரு சாண் வயிற்றுக்குத்தானே. 'நான் வைராக்கியக் கலப்பைகொண்டு, மனத்தை உழுது, அறிவைநட்டு, அன்பைப் பாய்ச்சி, தியானத்தால் வளர்த்து, சுத்த முத்திக்கனி விளைவிக்கிறேன் என்றான் பையன்.

பையனை எப்படியும் ஒரு தொழிலில் ஈடுபடுத்திவிட்டால் திருந்தி விடுவான் என்று தந்தை எண்ணினார். பல வகை முறைகளையெல்லாம் கையாண்டார். ஒரு தொகைப் பொருளைக்கொடுத்து வியாபாரம் செய்யுமாறு தூண்டினார். பொருளை பெற்றுச்சென்ற நானக் காட்டின் நடுவே சாதுக்கள் கூட்டத்தைக்கண்டார். ஆனந்தம் கொண்டார். கொண்டுசென்ற பொருள் அனைத்தையும் சாதுக்களுக்கு அன்னதானம் செய்தார். வீடு திரும்பினார். வியாபாரம் எப்படி என்றார் தந்தை. நல்ல லாபம் என்றான் பையன். எங்கே லாபம் ? அப்பா பரலோகத்திலே லாபம். சரக்கைவிடச்சாதுசங்கம் நல்லது. பணத்தைவிடச்சாதுக்கள் பணிவிடை நல்லதல்லவா?

சிலநாட்கள் சென்றன. தந்தை மீண்டும் முயற்சி செய்தார். அரசரின் களஞ்சியத்தில் தானியம் அளக்கும் வேலை வாங்கித்தந்தார் தந்தை. நானகர் ஊரிலுள்ள ஏழை எளியவர்களை யெல்லாம் அழைத்துத் தானியத்தைத் தாராளமாக அளந்துவிட்டார். ஒருநாள் ஏக், தோ, தீன் என்றளந்து தேரா (13) என்று வந்தவுடன் உணர்ச்சிமேலிட்டவராய் வந்தவர் போனவர்கள் எல்லாருக்கும் தானியத்தை அளந்து களஞ்சியத்தை வெறுமையாக்கிவிட்டார். தேரா என்றால் 13 என்றும் நான்உன் உடைமை என்றும் பொருள். இறைவ யான் உன் உடைமை; என்னை ஆண்டு கொள் என்பதே அவரது உள்ளத்தில் நிலைநின்ற பொருளாகும்.

சமயங்களின் பெயரால் மக்கள் போரிடுவதை வெறுத்துச் சமரச நெறியை மக்கட்குப் புகட்டி வந்தார். 'சமயம் என்று பேச்சளவோடு நிற்பதில் பயனில்லை. எல்லா மக்களையும் சமமாக நோக்குவதே உண்மைச் சமயத்தின் அடையாளமாகும். தியானம் செய்வதுமட்டும் சமயமாகாது. புண்ணிய தீர்த்தங்களில் நீராடலும் திருத்தலங்கட்குச் செல்வதுமட்டும் சமயமாகா. தூய வாழ்க்கை நடத்துதலே உண்மைச்சமய நெறியாகும்.' என்று இவர் மக்களுக்குப் போதித்து வந்தார்.

ஹரித்துவாரத்தில் சில அந்தணர்கள் கிழக்கே நோக்கிப் பிதிர்களுக்கு அர்க்கியம் விட்டனர். இவரோ மேற்கே திரும்பிப் படிகளில் தண்ணீரை வாரிவாரி இறைத்தார். ஏனிப்படி என்றனர் அந்தணர். ஏன் அப்படி என்றார் நானகர். நாங்கள் பிதிர்லோகத்திலிருக்கும் எமது முன்னோருக்கு அர்க்கியம் விடுகிறோம். நான் அதோ மலைமீது தெரியும் செடிக்கு நீர்ப்பாய்ச்சுகிறேன். முட்டாள் மனிதரே இங்குத் தண்ணீர் இறைத்தால் அம்மலைக்குப் போகுமா?

நீங்கள் இங்குவிடும் தண்ணீர் கண்காணாத பிதிர்த்தேசத்திற்கும் போகும் என்றால் நான் இங்கு இறைக்கும் தண்ணீர் ஏன் கண்காணும் இடத்திற்குப் போகாது?

மாதானா என்ற ஒரு முஸ்லீம் இசைவாணர் இவருடன் சேர்ந்தார். நானக் தம் கருத்துக்களை கிருதிமூலம் பாடுவார். அவற்றை மாதானா இன்னிசைக் கருவியில் வாசிப்பார். ஒருநாள் நானக் குளித்துக் கொண்டிருந்த பொழுது இவர் கண்ட உண்மையை அனைவருக்கும் எடுத்துரைக்குமாறு இவருக்கு ஈசுவர ஆணை பிறந்ததாக உணர்ந்தார். காசியிலிருந்து மக்காவரைக்கும் காஷ்மீராத்திலிருந்து கதிர்காமம் வரைக்கும் இவர் பிரயாணம் செய்ததாகக் கூறப்படுகிறது.

சாதி சமய வேறுபாடுகள் பொருளற்றவை என்றும், எல்லாருக்கும் ஈசன் ஒருவனே, அவனை வாயினால்பாடி, மனத்தினால் தியானித்து, அவனருள் பெற்று, அவனை அடைவதே மனிதப்பிறவியின் பயன் என்றும் சென்ற இடமெல்லாம் உபதேசம் புரிந்தார். ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றாய் வசிக்கின்றனர். அவர்களுக்கிடையே ஆணவத்தடை உள்ளது. இத்தடை நீங்கினால் இறைவனைக் காணலாம். அதற்குக் குருபக்தியும், நாமசாதனையும், தியானமும் வேண்டும். எங்குமுள்ள இறைவன் உன் உள்ளத்திலும் உள்ளான். பூவில் மணமும் நாவிற் சுவையும் போல உன் உள்ளத்திலிருக்கின்றான் இறைவன்.

நானக் தமது கடைசிக்காலத்தை கர்த்தார்பூர் என்னும் ஊரில் தம்குடும்பத்தினரோடு கழித்தார். 1538ல் ஊனுடலை விட்டார், நானக்குக்குப் பின் வந்த குருக்களுள் நான்காவது குரு ராமதாஸ் என்பவர் அமிர்தசரஸ் என்னும் நகரத்தையும், அந்நகரில் விளங்கும் பிரசித்தி பெற்ற பொற்கோயிலையும் அமைத்தார். அடுத்தகுரு அர்ஜுன் என்பவர் நானக்கின் கீதங்களையும் ஏனைய குருக்களின் நன்மொழிகளையும், கபீர், நாமதேவ், முதலிய பெரியோர்களின் பாக்களையும் தொகுத்தார். இத் தொகுதிக்கு ஆதிகிரந்தம் என்று பெயர். இதைத்தான் சீக்கியர்கள் தங்கள் கோயில்களில் வைத்துத் தொழுகின்றூர்கள். விக்கிரகங்கள் வைத்துத் தொழுவதில்லை. சீக்கியக்குழுவினரைச் சீர்திருத்த நியமங்களை விதித்துச் சில கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்தியவர் கடைசிக்குருவாகிய கோவிந்தசிங்கு. இவர் மொகலாயர்களின் கொடுமையிலிருந்து சீக்கிய மக்களைக் காப்பாற்றினுர். குருபதவிக்குப் பதிலாக கல்சா என்னும் பெரியோர்கள் அடங்கிய சபையை நிறுவினுர். நூதன முறையில் ஒரு உபநயனச் சடங்கையும் ஏற்படுத்தினுர். இதில் புனிதமாக்கும் கருவியாகக் கத்தி பயன்படுகிறது. ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் வளர வேண்டிய குணங்களுக்கு வெளியடையாளங்களாகச் சிலவற்றைச் சீக்கியர்கள் தரிக்கவேண்டும் என்று விதித்தார். இவற்றின் பெயர்கள் 'க' வர்க்கத்தில் தொடங்குவதாலும், இவை ஐந்து ஆனபடியினுலும் இவற்றைப் பஞ்சககாரங்கள் என்று அழைப்பர். இவையாவன:—

1. கங்கம் (சீப்பு) — தூய்மையைக் குறிப்பது, 2. கரம் (கைவளை) நேர்மையைக் குறிப்பது, 3. கச்சம் (அரைக் கச்சம்) புலனடக்கத்தைக் குறிப்பது, 4. கிரிப்பான் (கத்தி) ஆன்மசக்தியைக் குறிப்பது, 5. கேசம் (நீண்ட மயிர்) தியாகத்தைக் குறிப்பது.

இவ்வைந்தையும் அணிகலமாயுடைய ஒவ்வொரு சீக்கியரும் சிங்கத்தைப்போல அஞ்சா நெஞ்சத்தோடு கடவுளின் ஊளியராக இருக்க வேண்டும் என்று குருகோவிந்தசிங் விதித்தார்.

# அப்பர் அருளமுதம் - 2

## (தம்பி தலைகீழாக நடக்கிறான்)

(முத்து)

யோகாசனம் பயிலுபவர்கள் சிரசாசனம் செய்யும் போது தலைகீழாக நிற்பார்கள். வேடிக்கை காட்டுபவர்கள் தலைகீழாகக் கைகளிலே நின்று கைகளால் நடப்பார்கள். எல்லாரும் காலால் நடப்பது இயல்பு. ஓரிருவர் கையால் நடந்தால் அதுபத்திரிகைச் செய்தியாகிவிடுகிறது.

பெற்றாருடைய சொற்கேளாது, பெரியவர்கள் காட்டிய வழியிலே நடவாது இறுமாந்து நடக்கும் சில வாலிபர்களைப் பார்க்கின்றோம். இவர்களை ஒவ்வொருவர் ஒவ்வொரு பெயரால் அழைப்பர். அது தறுதலை என்பார் கிழவனார். நடுத்தரவயதுடையவர்கள் காவாலிப்பயல் என்பார்கள். பாட்டி சொல்லுவாள் அவன் இப்போதலையால் நடக்கிறான் என்று. கொட்டமெல்லாம் அடங்கி நொந்து போன மகனைப் பார்த்து பெற்றதாய் தம்பி தலைகீழாக நடந்துதானே இந்தக் கதிக்கு ஆளானான் என்று இடித்துக்காட்டுவாள். அவள் இடித்துக்காட்டுவதில் நியாயம் உண்டு. அவனுக்குப்பின்னால் உள்ள சின்னஞ்சிறுசுகளாவது அவனைப்போலக் கெட்டழிந்து போகக் கூடாது என்பதுதான் தாயினுடைய ஆசை.

வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி தாயும் தந்தையும் சம்பாதிக்கின்றனர். இம்மியும் பிறருக்கு ஈவதில்லை. தந்தை திடீரென இறந்து விடுகின்றான். தந்தையின் இடத்திற்கு மகன் வருகிறான். குடும்பத் தலைவன் ஆகின்றான். தந்தை பாடுபட்டதை மகனால் உணரமுடியவில்லை. ஊதாரித் தனமாகச் செலவு செய்கின்றான். ஊரார் அவனைப் பார்த்து பையன் தலைகால் தெரியாமல் நடக்கிறான் என்று சொல்லுகின்றனர்.

உலகில் பிரக்கியாதிபெற்ற யாரோ இப்பழமொழிகளைக் கையாண்டதனுல்தான் அவை இன்றும் வழங்கிவருகின்றன. அங்ஙனம் தலைகால் தெரியாமல் முதன் முதல் வாழ்ந்தவர்கள் பிரமாவும் விஷ்ணுவுமாகும். பிரமாவுக்கும் விஷ்ணுவுக்குமிடையில் யார் பெரியவர் என்ற விஷயத்தில் பெரும்போட்டி நடந்தது.

ஒரு முறை தான் படைத்த உலகத்தைப் பிரமதேவர் சுற்றிப்பார்வையிட்டுவந்தார். அலைகடலில் ஆடித்துயின்றிருக்கும் ஸ்ரீ மகாவிஷ்ணுமூர்த்தியைப்பார்த்து நீ யார் என்று கேட்டார். ஸ்ரீ மகாவிஷ்ணுவின் உந்திக் கமலத்திலிருந்து தான் பிறந்தவர் என்பதையும் மறந்து தன்னுடைய படைப்பில் இப்படி ஒருவர் இல்லை என்று அவருடன் வாதம் புரிந்தார் பிரமதேவர். வாய்ப்பேச்சு முற்றி பலயுகம் இருவரும் போர் புரிந்தனர். சிவபெருமான் இருவருக்கும் கருணைபுரியும் நோக்குடன் சோதி ரூபமாகத்தோன்றினுர். இருவரும் போர் ஒழிந்து சோதியை நோக்கினர். எங்களில் யார் பெரியவர் என்று இருவரும் கேட்டனர். சோதியின் அடியையும் முடியையும் யார் காண்கின்றனரோ, அவர் பெரியவர் எனச் சோதி பேசியது. உடனே பிரமதேவர் அன்னப் பறவையாகி முடியைக்காணப் புறப்பட்டார். விஷ்ணுமூர்த்தி பன்றியாகி அடியைக் காணப் புறப்பட்டார். அடியைக்காண முடியாதவராய் இளைத்துத் திரும்பினுர் ஸ்ரீ மகாவிஷ்ணுமூர்த்தி.

அன்னமும் பறந்து பறந்து அலுத்துவிட்டது. இந்த நேரத்தில் தாழம்பூ ஒன்று கீழ்நோக்கி வந்துகொண்டிருந்தது. எங்கிருந்து வருகிறுய் என அன்னம் கேட்டது. சிவபெருமானின் முடியிலிருந்து வருகிறேன்எனத் தாழம்பூ பேசியது. சிவபெருமானின் முடி எவ்வளவு தூரத்தில் உள்ளது? எத்தனையோ யுகங்களாக விழுந்துகொண்டிருக்கின்றேன். இன்னும் ஒருமுடிவையும் காணவில்லை எனத் தாழம்பூ பேசியது. தான் முடியைக்காண முடியாது என

அன்னம் அறிந்துவிட்டது. தாழம்பூவின் துணையுடன் தான் முடியைக் கண்டதாக அன்னம் பொய் பேசியது.

சிவபெருமானின் தலையைத் தெரியாமல் பிரமதேவரும் காலைத் தெரியாமல் மகாவிஷ்ணுவும் தருக்குக் கொண் டார்களாதலால் முதன்முதல் அவ்விருவருமே தலைகால் தெரியாமல் நடந்திருக்கிறார்கள். அப்பர் சுவாமிகள் இதனை வைத்துக்கொண்டே ''இலிங்க புராணத் திருக்குறுந்தொகை'' என்றொருபதிகம் பாடியுள்ளார்.

திருமாலும் பிரமனும் அன்பு பாராட்டி அடிமைத் திறங் கருதாமல் தம்மாற்றலால் சிவபெருமானது அடியையும் முடியையும் காண முயன்றனர். சிவபெருமான் அருளினால் தாமாகவே இங்குற்றேன் என்று இலிங்கத்தில் எழுந்தருளினான். இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை, சிவபெருமானை அடையும் நெறிநான்கனுள் சரியையின் இன்றியமையாச் சிறப்பை வற்புறுத்தி எடுத்துக் கூறுவதுடன்சிவலிங்கத் தத்துவத்தையும் கூறுவதால் இப்பெயர் பெற்றது.

''வெந்த நீறு விளங்க அணிந்திலர்
கந்த மாமல ரிண்டை புனைந்திலர்
எந்தை யேறுகந் தேறெரி வண்ணனை
அந்தங் காணலுற் றாரங் கிருவரே''

நீறு மலங்களையெல்லாம் அழிக்க வல்லது. இனிமேல் அதனை நெருப்பினால் தகிக்க முடியாது. நீறு சிவத்தை நினைப்பிப்பது. நீறு அணிவோர் சிவனை நினைப்பிக்கச் செய்பவர்கள். நீறு அணிபவர்களுக்கு நெற்றியில் நீறு விளங்குவது போலவே அவர்கள் உள்ளத்திலும் சிவம் விளங்கும். எமது அன்பின் அடையாளமாக மலரிட்டு வணங்குகின்றோம். அன்பின் முதிர்ச்சியின் அடையாளமாக மாலையணிந்து இறைவனை அலங்கரிக்கின்றோம். பிரம விட்டுணுக்கள் இருவரும் நீறு அணிந்தாருமல்லர்; மாலைபுனைந்தாரு

மல்லர். எமக்கெல்லாம் தந்தை என்று உணர்வு வரப்பெற்ருல் இறைவனே எம்மை நாடி ஓடி வருகின்ருன். பிரம விட்டுணுக்கள் இருவரும் இத்தகைய வழியை விடுத்துத் தாம் காணுவோம் என்று புறப்பட்டனர். தோல்விகண்டனர். இறைவனே வழிபாடாற்றினர். அவர்கள் அகந்தை அழிந்தது. அகந்தை அழிவைக்கண்ட இறைவனுர் தம்மை இலிங்கத்தே காட்டினுர். ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெருஞ்சோதியை, நீறணிந்து மலர்கொண்டு அர்ச்சித்தால், நாம் காணமுடியும்; அநுபவிக்க முடியும்.

இன்றும் சிலர் கோயில் செல்லமாட்டோம்; மலரிட்டு வணங்க மாட்டோம்; கடவுள் என்ெருருவன் இருந்தால் எம்முன் வருவதற்கு அவன் பயப்படவேண்டும் என்று மமதை கொண்டு பேசுகின்றனர். இவர்கள் எல்லாரும் மமதைகொண்ட பிரமாவின் படைப்புகள் தானே. அப்பிரமதேவரிடம் உள்ள மமதை இவர்களிடமும் இருப்பதில் வியப்பில்லையல்லவா?

"செங்கணுனும் பிரமனுந் தம்முளே
எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலர்
இங்குற் றேனென்றி லிங்கத்தே தோன்றினுன்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே."

**

## கடவுள் நாமம்

கடவுள் நாமமே அச்சக் கடலைக் கடக்கும் தோணி. இருளையோட்டும் சூரியன். துன்பத்தை மறக்கச்செய்யும் நகை. கடவுள் நாமமே மனிதருடைய நோய்கள் அனைத்துக்குமான அமிர்த சஞ்சீவியாகும். கடவுள் நாமத்தைக் கேட்டால் உண்மை, திருப்தி, அறிவு மூன்றும் உள்ளத்தில் உதயமாகும்.

—குருநானக்.

# மரக்கறி உணவும் மாமிச உணவும்

(மாத்தளை — அருணேசர்)

இறைச்சி சாப்பிடுதல் அல்லது எதனையும் சாப்பிடுதல் என்ற உணவு முறைக்கும், சுத்தமான மரக்கறி உணவு முறைக்கும் இடையே விவாதம் நடப்பதுண்டு. உடல் நலத்துக்கு இன்றியமையாததும், ஒழுக்க முறையானதும், மனிதத் தன்மைக்கு ஏற்றதானதும் ஆகிய உணவு எது என்பதே அவ்விவாதம்.

சாதாரணமாக, பழக்கத்தையும் விருப்பத்தையும் பொறுத்ததாக அவ்வுணவு முறையை நிர்ணயிக்க முடியாது. சரியானபடி மதிக்கப்படின், அதன் பல்வேறு இயல்புகளுக்குப் பதிலாக, அதன் எல்லாக் கூறுபாடுகளும், பிழையற்ற ஒரே முடிவைத்தான் நாடுகின்றன. இறைச்சி உண்ணுவதை அநுசரிக்கவோ, நிலைநாட்டவோ காட்டப்படும் எந்தத் தர்க்கவாதமும் உண்மையின் ஒலியில் முழு கூறுபாட்டையும் எதிர்த்து நிற்க முடியாது.

சமய நோக்கில்கூட அதனை மூடக்கொள்கையாகச் சிலர் கொண்டாலும், அது வெறும் நம்பிக்கையை மட்டும் உடையதல்ல. மதம் என்பது மனிதரின் ஆழ்ந்த அநுபவத்தின் பேரில் பாரம்பரியத்திலிருந்தே நிலைநாட்டப்பட்ட ஆத்மானுபவமாகும். அதன் கோட்பாடும் ஏறக்குறைய நியாயமற்ற தடையை உடையதல்ல. மத நம்பிக்கை இல்லாதவர்கள்கூட இதனை எதிர்க்கமாட்டார்கள். அறிவுள்ள ஆத்மாவுக்கு நெருங்கியதான அடிப்படைத் தன்மையை லோகாயத அறிவு ஒதுக்கிவிடுகிறது.

இந்து மதக் கொள்கையின்படி மிருக இறைச்சியை உண்ணுவது தடைசெய்யப்பட்டதாகும். கிறிஸ்தவ சமயத்திலும் இதே கொள்கைதான் முதலில் இருந்தது. ஹீப்ரு கிறிஸ்தவ வேத நூலின் முதல் அத்தியாயத்தில், அதாவது

பழங்காலத்திலிருந்தே வந்ததாககாணப்படுவதான, முதலாவதுக்கு அடுத்து இரண்டாவதாக வரும் கட்டளையில், 'உலகில் உயிருடன் வாழும் ஒவ்வொரு பொருளின் மீதும் ஆட்சியுடனும், பயனுடனும், கண்ணிய முடனும் இரு..........' என்று கூறப்பட்டுள்ளது.

எலோகிம் என்பவர், 'பூமியின் மீதுள்ள விதை தரக்கூடிய ஒவ்வொரு மரமும், விதை கொடுக்கும் பழமும், உமக்கு உணவாகப் பயன் படட்டும்' என்று கூறியுள்ளார்.

பிற்காலத்தில் எதைச்சொல்லியிருந்தாலும் செய்திருந்தாலும், இது உலகில் எத்தனை ஆயிர ஆண்டுகாலப் பழக்கமாயிருந்தாலுங்கூட, உலகினர் உண்பதன் பொருட்டு இறைச்சிக்காக உயிரைக்கொல்லக் கூடாது. என்பதுதான் நீதிமுறை. இதுவே மனிதனுக்குத் தெய்வத்தால் இடப்பட்ட பழமையான கட்டளை. ஆகவே, நாம் தெய்வ நீதியை மீறுதல் என்பது பாபம் எனக் கருதுவோமானல், அல்லது கடவுளோ தெய்வீகமோ என்பதில் எதை மனதில் கொண்டாலும், இந்துக்கள் அல்லது பௌத்தர்களுக்குப் போல இறைச்சி உண்ணுதல் கிறிஸ்தவர்களுக்கும் யூதர்களுக்கும் பாபம் என்றே கொள்ளவேண்டும்.

மாமிசம் உண்ணும் பழக்கம் தற்காலம் எங்கும் சாதாரணமானதாக ஆகிவிட்டாலும் அதனல் ஏற்படும் பாபம் பாபமேதான். அது எவ்விதத்திலும் அகிம்சையை மீறுவதே. இக்கொள்கை இந்துக்களுக்கும், சைணர்களுக்கும், பௌத்தர்களுக்கும் மட்டும் முக்கியமானதல்ல; எந்த உயர்ந்த உயிருக்கும் இது ஒரு சட்டமே என மதிக்கப்பட்டுவந்துள்ளது. மேற்கு நாடுகளில் பித்தா கோரஸின் உபதேசங்களிலும் இது முக்கியத்துவமாகக் காணப்படுகிறது. இறைச்சி உண்பது மனிதனின் இயற்கையான சுபாவமல்ல.

தற்காப்புக்காக ஒருவர் ஓர் உயிரைக் கொல்கிறர் என்றல், (அது ஒரு புலியோ, கொசுவோ எதுவாயிருக்

கட்டும்) பாதுகாப்பற்றதும் அமைதியானதுமான வீட்டுப் பிராணியோ அல்லது எந்தப் பிராணியோ ஆயினும் அதன் உயிரைப் பிரிப்பது எந்தவித காரணத்தைக் கொண்டும் நீதியின்பாற்படாது.

நாம் சில பிராணிகளை வீட்டில் வளர்த்துப் பாதுகாக்கின்றோம். அவற்றை நாம் வளர்ப்பது நம் சுய நன்மைக்காகவேயன்றி, அவற்றின்மீது பரிதாபம் கொண்டல்ல. அதனால், நாம் அவற்றைக் கொல்லும் உரிமையைக் கொண்டுள்ளோம் என்பது பொருளல்ல.

கொலை செய்வது போரில் மட்டும் அனுமதிக்கப் படலாம். மனிதன் குரங்குபோல இயற்கையில் தாவர பட்சணியே யன்றி மாமிச பட்சணியே யல்ல. அவனுடைய அவயவங்களின் இயற்கை அமைப்பு மரக்கறி உண்ணத் தக்கவிதமாகவே யன்றி, மாமிசம் உண்ணத் தக்கதாகப் படைக்கப்பட்டிருக்கவில்லை.

இக்கட்டுரை, 'ஆல்டோ லாவாக்னினி' என்பவரால் 'இந்தியன் ரிவியூவில்' ஆங்கிலத்தில் எழுதப்பட்டதன் மொழிபெயர்ப்பாகும்.)

★★

## கடவுள் உறைவிடம்

கடவுள் எப்போதும் அறவோர் இதயத்தில் உறைகின்றான். அறிவுள்ள இடத்தில் அறமுண்டு. பொய்யுள்ள இடத்தில் பாவமுண்டு. ஆசையுள்ள இடத்தில் மரணமுண்டு. மன்னித்தல் உள்ள இடத்தில் கடவுள் இருக்கிறார்.

—குருநானக்.

# நிலையான நிரைகழலை நிலையாகப் பெற முயல்க

(சிவயோகச் செல்வன் சாம்பசிவம்)

ஆழி சூழ் உலகத்தே 'குறிப்பாக, இவ்விருபதாம் நூற்றுண்டில் நன்றி என்னும் நல்லறத்திற்கு உவமானமாக எடுப்பது ஆறறிவற்ற ஜீவன் (நாய்) என்பதை மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. ஆகவே; மானிடராகிய நாமெல்லாம் நன்றியற்றவர்களா? ஆம்! கோபிக்க வேண்டாம். ஆச்சரிய படவேண்டாம். சிவநேயர்களே சற்றுச் சிந்தியுங்கள். ஏன் நாம் நன்றியற்றவர்கள். நாம் நன்றி உள்ளவராக இருப்பதெம் சகாக்களின் மத்தியிலேயே. எம்மவர் நமக்கு அளித்த பண உதவிக்கும் அன்னவர் ஆற்றிய சரீர உதவிக்கும்தான் யாம் நன்றியுள்ளவராக வாழ்கின்றேம். இன்றைய உலகின் அனேகம் பேர் நன்றிக் கடனை பூர்த்தி பண்ணுதவர்கள் என்பதே கடையவன் கூற்று.

தெருவில்போகும் ஒருவன் எமைப்பார்த்து இவன் சரியான நன்றிகெட்டபயல் என்று கூறினல் எமக்கு உடனே சினம்வரும். அங்கே என்ன நடக்கும் மதன் என்னும் பாறை தாக்க எம்மை நாம் அறியாதவராகிறேம். அவன் எங்களை அவ்வண்ணம் ஏன் பேசவேண்டும் எனச் சிந்திக்கிறேமா? இல்லை. சிந்தித்து செயலாற்றுபவனே மனிதன். சிந்தையிலே சிறிது சிந்திக்கும் போது எம்மைவிட நன்றிக்கு நன்றி கூறும் தென்னைமரம் நினைவுக்கு வரவேண்டும்.

கண் எதிரே நிற்கும் தென்னைமரம் முன்னம் தானுண்ட நீரை பின்னர் தலையாலே தான்தந்து தன் செயல் உணர்ந்து நீடி நிமிர்ந்து நிற்கும் நிலைதான் என்னே? நானேன் நிமிர்ந்து நிற்கின்றேன் என்ருல் தன்னை வளர்த்தவனுக்கும் நன்றி மாணுகி படைத்தவனுக்கும் அபிடேக இளநீராகி என் பிறப்பின் கடமை செய்துவிட்டேன் என்று துணிந்து கூறும். இவ்வேளை நாம் துணிந்துகூற வெட்கப்

படவேண்டும். சிந்தையிலே நன்றியை பற்றி நினைக்குந் தோறும் உள்ளம் வள்ளுவத்தை தொடவேண்டும். எவ் வகையான நன்றியை நாம் மறப்பினும் ஒருவர் நமக்கு செய்த நன்றியை மறக்கவொண்ணுது என்பதை தெய்வ புலவரவர்,

''எந்நன்றி கொன்றுர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்றமகற்கு.''

என்றுர்.

ஆங்கு இன்னுேர் குறளில் செய்த நன்றியை மறப்பது நல்லதல்ல இவ்வேளை அவன் செய்த தீமையை அன்றே மறக்கவேண்டும் என்பதை,

''நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று''

என்றுர்.

மனிதா! எமக்கென்றும் தீமையை செய்யாதவன் கன விலும் அதனை நினைக்காதவன் என்றுமே நல்லதை செய்து, நன்மையை எம்முடனிருந்தே செய்விக்குமப் பெருமகன் யார்?

வேறுயாருமல்ல அவனே பரம்பொருளாகிய இறை வன். இவனே அப்பனுகி, அம்மையாகி, ஐயனுகி, மாம னுகி, மாமியாகி எம்முடன் இருக்கிருன். தாயாகிய தத் துவன், எமக்காற்றிய நன்றி என்ன? அதுவே நாம் பெற் றிருக்குமிப் புண்ணிய மானிடப் பிறவி. தேவர்களே விரும்பு மிந்த மானிடப்பிறவி கிடைப்பது அரிதினும் அரிது.

இஃதை ''அரிது அரிது மானிடராதல் அரிது. என மொழிந்தாள் ஒளவை. நன்றி ஒருவருக்குச் செய்தபின்பு அதற்காக பிரதி உபகாரம் பெற நினைப்பது தவறென் பதே தமிழ் மூதாட்டியின் கூற்று. நன்றி ஒருவருக்குச் செய்தக்கால் அந்நன்றி என்று தருங்கொல் எனவேண் டா என்பதேயம் முதுமொழி. இம்மொழிக்கொப்பவனே இறைவன். எம்மிடமிருந்து எவற்றையும் நன்றி உபகார

மாக ஏற்க நினைக்காதவன். இன்னும் யாம்கேட்கும் அனைத்தும் தந்து எம்மையணைக்கும் சிந்தையன். வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பரமனின் பாதத்தை பணிந்திடேல் இப்பிறவியின் பயனையடையோம். மானிடப்பிறவி தந்த மங்கை பாகனை அரை நிமிட நேர மட்டிலாவது தியானிக்க வேண்டுமென்பதே அருணகிரியின் அவா.''

நன்றியெனும் நயத்தைப் பெற்றோராகிய நாம் எமது நெஞ்சை தட்டி எழுப்பி நெஞ்சே நீ நினையாய் நிமிர் புன் சடை நின்மலனை என நினைவூட்டி, ''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி'' பூசலார் நாயனார் போன்று காயமாகிய கோயிலில் இருத்தி அவனடி யேத்தி வழிபடும்போது வெள்ளை நிற மல்லிகை சாத்த வேண்டாம். வேறெந்த மலரையும் சாத்தவேண்டாம். உங்கள் உள்ளக் கமலமான பரிசுத்த மலரை கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு கருணாகரக் கடவுளின் பாதத்தில் போட்டு அவனது கடைக் கண் பார்வையையேனும்பெற முயலவேண்டும்.

இம்மட்டோடு நின்றுவிடாது சிவனடியார்மீது அன்பு காட்டவேண்டும். ஏனெனில் சிவன் அடியாருள் அடக்கம். ஆதலால்தான்அன்பர்தம் பெருமைசொல்லவும்பெரிதே என்றுள் ஒளவை. எல்லா சீவன்களிடத்தும் அன்புகாட்ட வேண்டும். அன்பால் சிவத்தைக்காண முயலவேண்டும். காரணம் சிவமே அன்பு, இதனைத் திருமூலர்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே

என இயம்பியுள்ளமை குறிப்பிடத் தக்கது. மானிடராக பிறந்ததால் நிலையாக இறைவன் திருவடியை பெற முயலவேண்டும். காரைக்காலம்மைபோன்று ஒளவை போன்று, அருணகிரி போன்று இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்பிறப்புண்டேல் அவனை மறவாத நிலையை

பெறவேண்டும். தேவர்களே கேட்டுப் பெறுமிப் பிறவியை கேட்காமலே தந்தவரோதயனுக்கு நன்றியுள்ளவராக வாழவேண்டியது எமது கடமை. ஒவ்வொருவரும் என் கடன் பணிசெய்து கிடப்பதே என வாழ்ந்து நிலையான நிரை கழலே நிலையாகப் பெற முயல்க.

மானிடப்பிறவி தானும்
வகுத்தது, மனம் வாக்காயம்
ஆனிடத் தைந்துமாடும்
அரன்பணிக் காகவன்றே
வானிடத் தவரும் மண்மேல்
வந்து அரன்றனை அர்ச்சிப்பர்

★★

# காந்தி வாக்கு

அஹிம்சையை அனுஷ்டிப்பவன் அநியாயஸ்தனுடைய ஆற்றலைச் சிறிதும் மதியான்; நகைக்கவே செய்வான். எதிர்க்கவும் மாட்டான், இடம் பெயரவும் மாட்டான். அதனல் எதிரியின் பலம் எண்ணிய பலன் தராது ஈனமாய்விடும்.

★★

ஆன்ம சக்தியில் எழும் அழலில் கடுங் கன்மனமும் கரைந்துவிடும். அன்பின் முன் நீரோர்வையொத்த கொடுங்கோலனும் ஆட்டுக்குட்டியாய் விடுவான். இதுமிகைப் படுத்திக் கூறுவதன்று. இரண்டும் இரண்டும் நான்கென்பது எவ்வளவு உண்மையானதோ அவ்வளவு உண்மையானதாகும்.

# ஒன்றே ஒன்று

— பேராசிரியர்: வ. பெருமாள், —
எம். ஏ., பி. டி., எம். ஆர். ஏ. எஸ்.
(தமிழ்ப் பேராசிரியர், முதல்நிலைக் கல்லூரி, உரிகம்.
கோலார் தங்கவயல், மைசூர் மாநிலம்.)

**ஒன்று** என்னும் எண்ணிற்குப் பல்வேறு சிறப்புக்கள் உண்டு. அவற்றுள் சிலவற்றை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஒன்றுக்குக் கீழ் பல பின்னங்கள் இருப்பினும் கணக்கின் தொடக்க எண்ணாகவும் முதல் எண்ணாகவும் ஒன்றைத்தான் நாம் வைத்திருக்கின்றோம், மிகப் பேரளவைக் கணக்கிடும்போதும் ஒன்றிலிருந்தே நாம் தொடங்குகின்றோம். ''ஒவ்வொன்றா நூறா ஒருமிக்க நூறா?'' என்னும் பழமொழி இங்கு நோக்கத்தக்கது. எனவே, எழுத்துக்களுக்கெல்லாம் அகரம் முதன்மையாக இருப்பதைப் போல் எண்களுக்கெல்லாம் ஒன்று முதன்மையாகவும் மூலமாகவும் இருக்கின்றது.

## இறைவன்:

இறைவன் மீது உண்மையில் நம்பிக்கை உள்ளவர்கள் ''இறைவன் ஒருவனே'' என்றும் தெளிந்த முடிவுக்கு வந்திருக்கின்றார்கள். கடவுளைக் குறிக்கும் சொற்கள் எல்லாவற்றையும் ஆராயுமிடத்து அவற்றில் ஒருமை விகுதிகள் இருக்கின்றனவே தவிரப் பன்மை விகுதிகளில்லை.

அரசன் அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும்.
அவனன்றி ஓரணுவும் அசையாது.
சாமி வரங் கொடுத்தாலும் பூசாரி இடங் கொடுக்க மாட்டான்.
கடவுளை நம்பினோர் கைவிடப் படார்.
எல்லா உயிர்களையும் காக்க ஓர் ஈசன் இருக்கிறான்.
அய்யன் இட்ட கணக்கு யாருக்கும் தப்பாது.
அவரவர் எண்ணத்தை ஆண்டவன் அறிவான்
அவனே இவனே என்பதைவிடச் சிவனே சிவனே என்பது நல்லது.
பிரமன் நினைத்தால் ஆயுள் குறையுமா?
அரியும் சிவனும் ஒன்று அதை அறியாதவன் வாயிலே மண்ணு.
கடவுள் இருக்கிறார்.
தெய்வச் செயல் இருந்தால் செத்தவனும் பிழைப்பான்.
தெய்வமே துணை.
தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி.
ஈசனுக்கு ஒப்பு எங்கணும் இல்லை.

மேற்கூறிய பழமொழி எடுத்துக்காட்டுகள் யாவும் இறைவன் பல பெயர்களால் குறிக்கப் பெற்றாலும் இறைவன் ஒருவனே என்பதை மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் மெய்ப்பிக்கின்றன. இவ்வுண்மையை,

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு'

என்னும் குறட்பா வாயிலாகவும் 'ஒன்றாகக் காண்பதே காட்சி' என்னும் ஔவையார் வாக்காலும் நன்கு அறியலாம். இறைவன் எண்ணிக்கையால் ஒருவன்; காலத்தால் முதல்வன். எனவே இறைவனுக்கு 'ஆதி' என்றும் 'மூலம்' 'ஆதிமூலம்' என்றும் பல பெயர்கள் ஏற்பட்டன.

'தாலத்தின் மரங்கள் காட்டித் தனிப்பிறை காட்டுவார்போல்
ஆலத்தின் உடுக்கள் காட்டி அருந்ததி காட்டு வார்போல்
தூலத்தை முன்பு காட்டிச் சூக்கும சொரூப மான
மூலத்தைப் பின்பு காட்ட முனிவரர் தொடங்கி னாரே'

— தாண்டவராய சுவாமிகள்: கைவல்லியநவநீதம்

ஒன்று என்னும் சொல் முதல் எண்ணைக் குறிப்பதோடு 'ஒப்பற்றது' என்னும் பொருளையும் குறிக்கும். 'ஆண்டவன் ஒருவன் இருக்கிறான்' என்பது நாம் அனைவரும் நன்கு அறிந்த பழமொழி. ஆண்டவன் எண்ணிக்கையால் ஒருவன்; பண்பால் ஒப்பற்றவன் என்பதை இப்பழமொழியில் உள்ள ஒருவன் என்னும் சொல் தெளிவாகக் குறிக்கிறது. இராமன் அன்புடன் குகனை நோக்கி 'நீ எனக்குத் தோழன்' என்று இயம்பினான். இராமனது இச்சொல்லைக் குகன் சிறப்பு வாய்ந்த ஒப்பற்ற மொழியாகப் பொன்னேபோல் போற்றுவதை இராமாயணத்தில் காணலாம்.

'ஆழ நெடுந்திரை ஆறு கடந்திவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ
தோழமை என்றவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ
ஏழமை வேடன் இறந்திலன் என்றெனை ஏசாரோ?'

## குலம்:

செல்வம், அறிவு, மொழி, முதலியவற்றால் மக்கள் வேறு[illegible]டிருந்தாலும் குலத்தால் உலகிலுள்ள மக்கள் அனைவரும் ஒன்றுபட்டவர்களே. இவ்வுலகில் ஒரே ஒரு குலம்தான் உண்டு. அதுதான் மனித குலம். இப்பேருண்மையை ஞாலத்தில் உள்ள நல்லறிஞர் அனைவரும் முழு மனத்துடன் ஒத்துக்கொண்டிருக்கின்றனர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் கணியன் பூங்குன்றனாரின் கனி மொழியும் 'ஒன்றே குலனும் ஒருவனே தேவனும்' என்னும் திருமூலரின் திருமந்திரமும் உலகத்தில் இருப்பது ஒரே குலம்தான் என்பதை நன்கு தெளிவுபடுத்து கின்றன. இந்த அடிப்படை உண்மையை உணராத அறிவிலிகளும் போலி அறிஞர்களும் மக்களிடையே ஏற்றத்தாழ்வைக் கற்பித்து வேற்றுமையை உண்டாக்கி விட்டார்கள். அதன் விளைவாகத் தீமைகள் பல ஏற்பட்டன. இத்தீமைகளை அகற்றி நன்னெறியை மீண்டும் ஏற்படுத்தப் பலர் முயன்றனர். அத்தகையோருள் இராமலிங்க அடிகள், பாரதியார், பாரதி தாசன் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

'மனிதரில் ஆயிரம் சாதி - என்ற
வஞ்சக வார்த்தையை ஒப்புவதில்லை
கனிதரும் மாமரம் ஒன்று - அதில்
காய்களும் பிஞ்சுக் கனிகளும் உண்டு.
பூவில் உதிர்வதும் உண்டு - பிஞ்சைப்
பூச்சி அரித்துக் கெடுவதும் உண்டு
நாவிற்கினியதைத் தின்பார் - அதில்
நாற்பதி னுயிரம் சாதிகள் சொல்வார்.
ஒன்றுண்டு மானிட சாதி - பயின்று
உண்மைகள் கண்டவர் இன்பங்கள் சேர்வார்'

என்ற பாரதியார் பாட்டு ஆழ்ந்து நோக்கத்தக்கது. மனித குலத்தில் உயர்வு தாழ்வைக் கற்பித்து வாயளவில் சொல்வதும் குற்றம், அதுவும் சாதாரண குற்றமன்று, மன்னிக்க முடியாத மாபெரும் குற்றமாகும் என்று பிறிது ஓரிடத்தில் பாரதியார் தெளிவாக உறுதிப்படுத்துகின்ருர்.

'சாதிகள் இல்லையடி பாப்பா! - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்!

## உண்மை:

'உண்மை' என்ற சொல்லிற்கு ஆழமாகவும் அகலமாகவும் பல்வேறுவகையில் பொருள் கூறலாம். நுனிப்புல் மேய்ந்தாற்போல் மேற்போக்காகப் பலவேறு பொருள் கூறினுலும் ஆழ்ந்து நோக்கும் போது அடிப்படையில் ஒரே உண்மைதானிருக்கும். அவ்வுண்மை மாருத உண்மை; நிலைத்த உண்மை; எங்கும் நிலைபெறுகின்ற பேருண்மை; முக்காலத்திற்கும் பொருந்துகின்ற முழு உண்மை; அதுவே உலகப் பொது உண்மை (Univresal truth) 'சத்தியம் வெல்லும் என்பது மெய்ஞ்ஞான உண்மை, 'உலகம் உருண்டை வடிவம், என்பது விஞ்ஞான உண்மை. இவ்வுண்மைக்கு மாருக உலகில் வேறென்றும் இல்லை. இவ்வுண்மை ஒரே உண்மைதான். சுருங்கக் கூறுமிடத்து மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றும் ஒன்ருக இருப்பதே உண்மை எனப்படும். சொன்ன சொல்லை மறைக்காமல், மறக்காமல்,

மறுக்காமல் காப்பாற்றிய உண்மை நெறியை அரிச்சந்திரன் வாழ்க்கையில் காணலாம்.

'பதியி ழந்தனம் பாலனை இழந்தனம் படைத்த
நிதியி ழந்தனம் இனிநமக் குளதென நினைக்கும்
கதியி ழக்கினும் கட்டுரை இழக்கிலேம் என்றூர்
மதியி ழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்.'
அரிச்சந்திர புராணம்.

இப்பாடல் உண்மை ஒன்றே என்பதை மிகத் தெளிவாக இனிது உணர்த்துகின்றது. புறத்தைத் தூய்மை யாக்கு வது தண்ணீர். அகத்தத்தைத் தூய்மையாக்குவது வாய்மை. இவ்வருங்கருத்தைத் திருக்குறள் இனிது இயம்புகின்றது.

'புறந்தூய்மை நீரால் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.'

மக்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று உரைக் காமல் உள்ளத்தில் உள்ளதை உள்ளவாறே உரைத்தல் வேண்டும் என்று நம் சமய இலக்கியங்களும், நீதி நூல் களும் ஒருங்கே இயம்புகின்றன, எனவே உண்மைக்கு 'ஒரு மொழி' என்ற நற்பெயரும் நாளடைவில் ஏற்பட்டு விட் டது. மனிதனுக்கு ஒரே ஒரு நாக்கு இருப்பதன் நோக்கம் ஒரு மொழியாகிய உண்மையே பேசுதல் வேண்டும் என்பதை உணர்த்துவதற்கே.

பொய்சொன்ன வாய்க்குப் போசனம் கிடையாது.
சத்தியமே சக்தி தத்துவமே சித்தி.
சத்தியமே தருமம்.
சத்தியமே நித்தியம்.
உண்மை சொல்லிக் கெட்டாரும் இல்லை. பொய் சொல்லி வாழ்ந்தாரும் இல்லை.
உண்மை சொன்னுல் உண்மை பலிக்கும்.
நன்மை சொன்னுல் நன்மை பலிக்கும்.
உண்மைப் படு நன்மைப் படு.
பொய் மெய்யை வெல்லுமா.

முதலியபழமொழிகள் உண்மையின் உயர்வை உள்ள ங்கை நெல்லிக்கனி போல் தெளிவாக உரைக்கின்றன.

## காதல்:-

அன்பின் பிணைப்பே காதல் எனப்படும். கண்கள் இரண்டு இருந்த போதிலும் பார்க்கப்படும் பொருள் ஒன்றுதான். இரண்டு காளைகள் வண்டியை இழுத்த போதிலும் சென்றதிசை ஒன்றுதான். தலைவன் - தலைவி, கணவன் — மனைவி, காதலன் — காதலி ஆகியோர் உருவத்தால் இருவராக இருந்தாலும் உள்ளத்தால் உணர்வால் உயர்வால் ஒன்று பட்டவர்களே. இருமையில் ஒருமையை அறிந்து உணர்வதே காதலின் அடிப்படைக் கொள்கையாகும். இராமனுக்கும் சீதைக்கும் இருந்த ஒரே உள்ளுணர்வைக் கம்பர் தம் சொல்லோவியத்தில் இனிது விளக்குகிறுர். இதோ அப்பாட்டு;

''எண்ணரு நலத்தினுள் இனையல் நின்றுழிக்
கண்ணொடு கண்ணிணைக் கவ்வி ஒன்றை யொன்று
உண்ணவும் நிலைபெருது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினுன் அவளும் நோக்கினுள்''

ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்ற காதல் முறையே தமிழ்ப் பண்பாடாகும். கணவன் மனைவிக்காக வாழ்வதும் மனைவி கணவனுக்காக வாழ்வதுமாகிய தூய நன்னெறியைத் தான் தமிழ் இலக்கியங்கள் சிறப்பித்து உரைக்கின்றன. கணவன் - மனைவி இடையே இருக்கின்ற பேரன்பு நிலை பெற்று ஒரே காதலாக அமைய வேண்டும். கணவன் மனைவியாக வாழ்கின்ற வாழ்க்கை என்றும் நிலைத்த வாழ்க்கையாக ஒரே தன்மையில் அமைதல் வேண்டும் என்ற அருங்கருத்தைக் குறுந்தொகை இனிது இயம்புகின்றது. இதோ அக்கவிதை:-

''இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியரென் கணவனை
யாஞ கியர்நின் நெஞ்சு நேர் பவளே''

சுருங்கக் கூறுமிடத்துச் செம்புலப் பெயல் நீர் போல அன்புடை நெஞ்சம் இரண்டும் ஒன்றாகத் தாமாகக் கலப்பதே தமிழர் கண்ட காதல் நெறியாகும்.

## மக்கட் செல்வம்:-

இல்லற வாழ்வில் ஒழுகுகின்ற பெண்ணின் உள்ளம் சிதறாத உள்ளமாக இருத்தல் வேண்டும். அத்தகைய கற்புள்ளம் படைத்த நங்கையை 'ஒருமை மகள்' என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

''ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு''

என்ற குறட்பா இவண் நோக்கத்தக்கது. இல்லற வாழ்க்கையின் பயன் நன்மக்களை பெறுதல். குழலையும் யாழையும் வெல்லும் குழந்தையின் மழலை மொழி, குறுநடை, சிறு விளையாட்டு ஆகியயாவும் பெற்றோருக்குப் பேருவகை தருவனவாகும். இதனைப் புறநானூறு இனிதியம்புகிறது.

''படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறு குறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசின் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே''
பாண்டியன் அறிவுடை நம்பி (புறம் 188)

நம் முன்னோர்கள் நன்மக்களைப் பெறவேண்டும் என்று சொன்னார்கள். அதே சமயத்தில் எத்தனை மக்களைப் பெறுவது என்பதையும் மிகத் தெளிவாகக் கணக்கிட்டுச் சொன்னார்கள். ஒரு குடும்பத்தில் இருக்க வேண்டியது ஒரே ஒரு ஆண் குழந்தையும் ஒரே ஒரு பெண் குழந்தையும் தான். ஆஸ்திக்கு ஒரு ஆணும் ஆசைக்கு ஒரு பெண்ணும். ஆசைக்கு ஓர் பெண்ணும் அம்பலத்திற்கு ஓர்

ஆணும் ஆகிய பழமொழிகள் ஒரு குடும்பத்தில் இருக்க வேண்டிய குழந்தைகளின் எண்ணிக்கையை நன்கு தெளிவு படுத்துகின்றன. ஒரு குடும்பத்தில் ஒரே ஒரு ஆண் குழந்தையும் (மகனும்) ஒரே ஒரு பெண் குழந்தையும் (மகளும்) இருப்பது வீட்டிற்கு நல்லது. நாட்டிற்கு நல்லது. உலகத்திற்கு நல்லது. இன்றைய குடும்ப நலத்திட்டம் நம் முன்னோருக்குத் தெரிந்ததே. ஒரு குடும்பத்தில் ஒரே ஒரு குழந்தை இருந்தால் கண் போன்று போற்றப்பெறும் என்பதை 'ஒன்னே ஒன்னு கண்ணே கண்ணு, என்னும் பழமொழியால் நன்கறியலாம்.

## நீதி:

'ஒன்றை' அடிப்படையாகக் கொண்டு தமிழில் அரும்பிய நீதிகளும் பழமொழிகளும் கணக்கிலடங்கா. நல்ல மாட்டுக்கு ஒரு சூடு நல்லபெண்ணுக்கு ஒரு சொல்.

ஒரு நன்றி செய்தவரை உள்ளளவும் நினை.
ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம்.
ஒருவர் அறிந்தால் இரகசியம் இருவர் அறிந்தால் அம்பலம்
ஒன்றைப் பிடித்தால் சாதிக்க வேண்டும்.
ஒன்றைப் பெற்றால் நன்றே பெறவேண்டும்.
ஒன்று தெரிந்தவனுக்கு எல்லாம் தெரியாது.
ஓர் ஆறு தாண்டாதவன் ஒன்பது ஆறு தாண்டுவானா?
ஓர் ஊர்ப்பேச்சு ஓர் ஊர்க்கு ஏச்சு.

மேற்குறிப்பிட்ட நீதிப் பழமொழிகள் ஈண்டு ஆழ்ந்து சிந்திக்கத் தக்கன.

## உவமை:

மக்களுடைய அன்றாடப் பேச்சு வழக்கில் பல உவமைகள் அமைந்துள்ளன. அவற்றில் 'ஒன்று' தலை சிறந்து காணப்படுகின்றது. எளிமையும் இனிமையும் வாய்ந்த இவ்வுவமைகள் செவிக்கும் சிந்தைக்கும் இன்பம் பயக்கவல்லன. விரிவஞ்சி சிலவற்றைமட்டும் காண்போம்.

ஓர் அச்சிலே உருக்கி வார்த்தாற் போல.
ஒரு கண்ணிலே வெண்ணெய்யும் ஒரு கண்ணிலே
சுண்ணும்பும் தடவியது போல..
ஒரு நாள் கூத்துக்கு மீசையைச் சிரைத்தது போல.
ஒரு பணம் கொடுத்து அழச்சொல்லி ஒன்பது பணம்
கொடுத்து ஓயச் சொன்னது பே ால
ஒரு கல்லால் இரு மாங்காயை அடிப்பது போல.

பழமொழி வடிவத்திலுள்ள இத்தகைய உவமைகள் தமிழில் நிலைபெற்று விட்டன என்பது தெளிவு.

## திருக்குறள்:

ஒன்று என்னும் எண்ணிக்கையைக் கொண்டு பல்வேறு நுண்ணிய உண்மைகளைத் தமிழ்ப் புலவர்கள் விளக்கியுள்ளனர். அவர்களுள் திருவள்ளுவர் மிகவும் குறிப்பிடத் தக்கவர். ஒரு பொழுது கூட வாழ்வது உறுதியற்ற நிலையில் இருக்கும் மனிதர்கள் கோடிக் கணக்கான எண்ணங்களை எண்ணுகின்றனர்.

'ஒரு பொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியும் அல்ல பல' (திருக்குறள் 337)

ஒரு பிறவியில் கற்ற கல்வி எழு பிறவியிலும் சிறப்புதரும்.
ஒரு பிறப்பில் ஆமைபோல் தன்னடக்கத்துடன் வாழ்ந்தால்
அஃது எழு பிறப்பிலும் துணைபுரியும்.

என்பவை வள்ளுவர் கருத்துக்கள். சூதாட்டத்தால் தீமையேயன்றி நன்மையில்லை. சூதாடுபவன் பெறுவதோ ஒரு மடங்கு. இழப்பதோ நூறுமடங்கு.

'ஒருமைக் கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து' (குறள் 398)

'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து' (குறள் 126)

'ஒன்றுஎய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோர் ஆறு' (குறள் 932)

ஒரே ஒரு தீச்செயல் நன்மை எல்லாவற்றையும் சேர்த்து கெடுத்துவிடும்.

'ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும்' (குறள் 128)

என்பது வள்ளுவர் வாய்மொழி 'ஆயிரம் கலம் நெல்லுக்கு ஓர் அந்துப் பூச்சி போதும்' என்னும் பழமொழி ஈண்டு நோக்கத் தக்கது.

## கருத்து:

உலகத்தில் தோன்றிய நல்லறிஞர்கள் காலம், இடம், மொழி ஆகியவற்றால் வேறுபட்டாலும் கருத்து, உணர்ச்சி, சிந்தனை ஆகியவற்றால் ஒன்றுபடுகின்றனர். பெரியோர் அனைவரின் சிந்தனையும் ஒன்றாகவே இருக்கும். **(Great men think alike)**

'கல்வி கரையில கற்பவர் நாள் சில' (நாலடியார்) என்று தமிழ்ப்புலவர் பாடினார். இதே கருத்தை அமெரிக்கக் கவிஞர் (Art is long and time is fleeting) (Long fellow: Apsalm of life)என்று கூறியுள்ளார். காலம், இடம், மொழி சமயம் ஆகியவற்றால் இவ்விரு கவிஞர்களும் வேறுபட்டாலும் அவர்கள் கூறிய கருத்து ஒன்றாகவே இருக்கின்றது. அரச பதவி மிகவும் துன்பமானது என்று இளங்கோவடிகள் மிகத்தெளிவாகப் பாடியுள்ளார்.

'மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
பிழை யுயி ரெய்திற் பெரும்பே ரச்சம்
குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக வில்லென'
—சிலப்பதிகாரம் 25 : 100 – 104

உலகம் போற்றும் ஆங்கில நாடகப் பேராசிரியராகிய வில்லியம் ஷேக்ஸ்பியர் இதே கருத்தை மொழிந்துள்ளார்.

'Uneasy lies the head that wears a crown' (Henry iv, ii, iii, i, (Line 31)

இவ்வாறு உலகப் பேரறிஞர்களின் கருத்துக்கள் எல்லாவற்றையும் தொகுத்துப் பார்க்குமிடத்துப் புறத்தே சில வேறுபாடுகள் தோன்றினுலும் அடிப்படையில் ஒன்ருகவே அமைகின்றன. இப்பேருண்மையை ஔவையார்.

'தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென்று உணர்'

என்று செவியினிக்க நன்கு பாடியிருக்கின்ருர்.

## கலை:

பல்வேறு இடங்களில் பல வகையான பூஞ்சோலைகள் இருக்கின்றன. அவற்றில் பல வண்ணப் பூக்கள் பூத்து அழகாக மிளிர்கின்றன. எங்கெங்கோ அமைந்துள்ள பூந்தோட்டங்களில் யார் கண்ணிலும் படாமல் பூத்துக் குலுங்குகின்ற பல்வேறு பூக்களை ஒன்ருகத்திரட்டுகின்ருன் கலைஞன். நிறம், மணம், அளவு, அமைப்பு, தன்மை ஆகியவற்ருல் வேறுபட்ட மலர்கள் ஒன்ருக இணைந்து அழகுடன் பொருந்தி ஒரே மாலையாகக் காட்சி அளிக்கும்போது கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக அமைகின்றது. தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக் கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி ஆகியவை ஒன்ருக இணைந்து ஒத்திசைக்கும்போது செவிக்கும் சிந்தைக்கும் பேரின்பமாய் இருக்கின்றது. பல்வேறு இசைக்கருவிகள் ஒன்றி இணைந்து இசைப்பதற்குத்தான் ஒத்திசை (Hormony) என்று பெயர். இசைக்கருவிகள் இசையும்போது இசையாகின்றது. இசையாதபோது ஓசையாகின்றது. கலை தன்னளவில் அமைந்துவிட்டால் போதாது. மனித உள்ளத்தில்

எழுகின்ற எல்லா உணர்ச்சிகளையும் திரட்டி ஒரு முனையாக்கிக் கலையின்பத்தை உணரச் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யவல்லதே உண்மையான கலை.

'கலையென்றால் உணர்ச்சிகளைக் கவரவேண்டும்
களிப்பூட்டி அறிவினைப்போய்க் கவ்வ வேண்டும்
நிலைகொள்ளாச் சிந்தனையை நிற்கச்செய்து
நீதிநெறி தெய்வநினைப் பூட்டற் கன்றோ
விலையில்லாப் பெருமைபல உடையதேனும்
விளங்காத பாஷையிலே பாட்டைக்கேட்டுத்
தலையெல்லாம் சுளுக்கேற அசைத்திட்டாலும்
தனுக்கதுவோர் கலையின்பம் தருவதுண்டோ?

என்று நாமக்கல் கவிஞர் பாடுகின்றார். எனவே உணர்ச்சிகளை ஒன்றுபடுத்திச் சிந்தனையை ஒரே நெறியில் நிற்கவைப்பதே கலை என்பது தேற்றம்.

## ஒற்றுமை:-

ஒருமித்த உணர்ச்சியின் பயனாக ஏற்படுவதுதான் ஒற்றுமை. மக்களிடையே வேற்றுமை உண்டு. அவ்வேற்றுமையில் ஒற்றுமை காண்பது தான் உயர்ந்த பண்பாடு. ஓரூரில் பலர் வாழ்கின்றார்கள். அவர்கள் பல மொழியினர் பல சமயத்தினர், பல கட்சியினர், பல்வேறு கொள்கைகளை கொண்டவர்கள். ஆனால் அவ்வூரில் ஒரு கல்லூரி ஏற்படுத்த விரும்புங்காலை அவர்கள் எல்லோரும் ஒன்றுபடுகின்றார்கள். வேற்றுமைக்கிடையில் ஒற்றுமை காண்கிறார்கள். கல்லூரியை நிறுவ எல்லோரும் ஒன்றுபட்டு ஒத்துழைத்து ஊக்கத்துடன் ஆக்கம் தேடுகின்றனர். இதுதான் ஒற்றுமை உணர்ச்சி. இதைத்தான் பாரதியார் தெளிவாக வலியுறுத்திப் பாடியுள்ளார்;

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே - நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் - இந்த
ஞானம் வந்தாற் பின் நமக்கெது வேண்டும்''

என்பது பாரதியார் பாட்டு. கையிலுள்ள ஐந்து விரல்களும் ஒரே சமமாக இல்லை. அளவு, உயரம், அமைப்பு ஆகியவற்றில் வேறுபடுகின்றன. ஆனால் தொழிலாற்றும் போது ஐந்து விரல்களும் ஒன்றுபடுகின்றன. உடல் உறுப்புக்கள் எல்லாம் ஒற்றுமை என்னும் உறுதியான அடிப்படையில் அமைந்து இயங்குகின்றன. எடுத்துக்காட்டாக நாடகத்தைக் காண்கிறவன் நடிப்பைக் கண்ணால் காண்கின்றான். உரையாடலையும் இசையையும் செவியால் கேட்டு மகிழ்கின்றான். நாடகத்தின் நுட்பத்தைத் தன் நுண்ணறிவால் அறிந்து அகமகிழ்கின்றான். எனவே நாடகத்தைச் சுவைக்கும் போது அவன் கண், காது, கழுத்து எல்லாம் ஒன்றுபட்டுச் செயலாற்றுகின்றன. தனி மனிதனின் உடல் உறுப்புக்கள் எவ்வாறு ஒன்றுபட்டு ஒத்துழைக்கின்றனவோ அவ்வாறே ஞாலத்திலுள்ள மக்கள் அனைவரும் உள்ளத்தால் ஒன்றுபட்டு ஊக்கத்துடன் உழைத்தால் உலகம் மிக விரைவில் நன்னிலை அடைந்து விடும் என்பது உறுதி.

## சமயம்

உலகத்தில் பல கலைகள் உண்டு. அவற்றிலொன்று சமையற் கலை. வன்மையான அரிசியை மென்மையான சோறாகப் பதப்படுத்துகின்ற கலைக்குத்தான் சமையல்என்று பெயர். அதைப்போலவே கல்நெஞ்சைக் கனி நெஞ்சாகப் பண்படுத்துவதே சமயம். மனம்போன போக்கெல்லாம் போகாமல் ஐம்புலன்களையும் அடக்கி, ஒன்றுபடுத்தி ஒரே நன்னெறியில் செலுத்தத் துணை புரிகின்றன. சமயம் எல்லாம் வல்ல ஆண்டவனை வழிபடுங்காலை மனம், மொழி, மெய் ஆகிய மூன்றும் ஒருவழிப்பட்டு வணங்குதலே சாலச் சிறந்தது. அத்தகைய வழிபாடுதான் பக்தி எனப்படும். பக்தி நெறியில் சென்றால் முக்தி யடையலாம் என்பது சமயப் பெரியோர்களின் தெளிந்த முடிவு. மனிதப் பிறவியின் பயன் நன்னெறியில் வாழ்ந்து இறைவனோடு ஒன்றுபடுவதே என்று நம் சமய நூல்கள் தெளிவுபடுத்

துகின்றன. சமயம் என்பது நெறி நன்னெறி; செந்நெறி; இறை நெறி; அருள்நெறி; மனத்தை ஒன்றுபடுத்த உதவும் ஒரே நெறி. அந்நெறியே வீடு பேற்றை அளிக்கும் ஆற்ற ல்வாய்ந்தது. அந்நெறிக்கு 'ஒன்று' என்ற பெயர்.

'ஒன்று' என்ற எண்ணிற்குப் பல சிறப்புக்கள் இரு ந்தாலும் அவற்றில்சிலவற்றைமட்டுமே இக்கட்டுரையில்கண் டோம். ஒன்று நமக்கு உணர்த்தும் பல்வேறு நீதிகளை உள்ளத்தில் கொண்டு ஒப்பற்ற வாழ்வு வாழ்வோம்.

★★

# காந்தி வாக்கு

மயக்கம் உண்டாகும் போது அறிவு பயன் படாது. நம்பிக்கை ஒன்றுதான் நம்மைக் காப்பாற்ற முடியும். ஆசை எழும்பொழுது அறிவு மயங்கிவிடும். அப்பொழுது நம்முடைய நடை சரியானது என்ற நம்பிக்கை தான் நம் மைக் காக்கும் கேடயமாகும்.

★★

என்ன இடையூறுகள் இருந்தாலும் இறுதியில் நன் மையே உண்டாகும் என்பதில் நான் அசையாத நம்பிக்கை உடையவன்.

★★

# 'கந்த ஷஷ்டி'

(ஆத்மநாதசர்மா)

கந்தனுக்குப்பிரியமான திதியாக அமைந்ததால் கந்த ஷஷ்டி என்று பெயர் வழங்கலாயிற்று. அசுரர் கொடுமையை நீக்கி அமரர்க்கு நல்வாழ்வு அளிப்பதுதான் கந்தனுக்கு பிரியமானது. அசுரர் கொடுமை நீங்கியதும் அமரர் நல்வாழ்வு பெற்றதும் ஐப்பசிமாதம் வளர்பிறை ஷஷ்டி திதியாகும். ஆகவே கந்தனுக்குப் பிரியமான திதியாக அமைந்தது. பதினைந்து திதிகளும் இவ்வாறே நடைபெற்ற சிறந்த நிகழ்ச்சிகளுடன் தொடர்புபடுத்தி வழங்கப்படலாயிற்று. உதாரணமாக இரண்டு மூன்றைக் கவனிக்கலாம். ஆவணி மாதம் தேய்பிறை அஷ்டமியன்று நடு இரவில் பூபாரம் தீர்க்க பூமியில் கண்ணன் அவதரித்தான். ஆகவே அன்று தொடக்கம் கிருஷ்ணுடமி என்ற பெயர் வழங்கலாயிற்று. நவமியில் நடுப்பகலில் தண்டகாரண்யத்தில் வசிக்கும் முனிவர்களின் துன்பத்தைத் துடைக்க அவதரித்தான் ராமன். அன்று முதல் ஸ்ரீ ராமநவமி என்ற பெயர் வழங்கலாயிற்று. ஸநகாதி முனிவர்களுக்கும் அமரர்களுக்கும் ஸ்ரீ மந்நாராயணன் வைகுண்டத்தில் காட்சியளித்தான். அன்று முதல் வைகுண்ட ஏகாதசி என்ற பெயர் வழங்கலாயிற்று. இவ்வாறு ஒவ்வொரு நிகழ்ச்சியின் தொடர்பு கொண்டு ஒவ்வொரு திதியும் சிறப்புடன் வழங்கப்படுகிறது. இதே முறையில்தான் கந்த ஷஷ்டி என்ற பெயரும் உலகெங்கும் போற்றப்பட்டு வருகின்றது.

சிவ குமாரன் கந்தன். இந்தக் கந்தனுக்கும் ஷஷ்டிக்கும் வேறு ஒரு வகையான தொடர்பு உண்டு என்பதை எடுத்துக் காட்டவே இந்தக் கட்டுரை வரையப்படுகின்றது. கந்தனுக்கு பிரியை (மனைவி) ஷஷ்டி திதி என்று தொடர்பு படுத்தி கந்த ஷஷ்டி என்பதற்கு விளக்கம் காணக்கூடியதாக இருக்கிறது.

—தொடரும்

# ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1 | திருப்புகழ் பூஜாமலர் | .50 |
| 2 | சமரச ஞானக் கோவை - க. இராமச்சந்திரா | 5.00 |
| 3 | ஆத்மநாதம் - மகரிஷி சுத்தானந்தர் | 3.00 |
| 4 | தீங்கனிச் சோலை - பரமஹம்சதாசன் | 2.50 |
| 5 | சைவ இலக்கிய கதா மஞ்சரி - அருணாசல தேசிகர் | 3.00 |
| 6 | பாட்டாளி பாட்டு - மகரிஷி சுத்தானந்தர் | 1.50 |
| 7 | இளங்கோவின் கனவு - நடராஜன் | 2.25 |
| 8 | ஆத்மஜோதி மலர் | 1.00 |
| 9 | நவராத்திரிப் பாடல் | .50 |
| 10 | கந்தரனுபூதி | .15 |
| 11 | கந்த சஷ்டி கவசம் | .15 |
| 12 | நித்திய கரும விதி | .25 |
| 13 | செல்லச் சந்நிதி பாடல் | .15 |
| 14 | கதிர்காமப் பதிகம் | .25 |
| 15 | மார்கழி மாதப் பாடல் | .20 |
| 16 | பித்துக்குளி முருகதாஸ் பாடல் | .50 |
| 17 | திருநீற்றின் பெருமை | .10 |
| 18 | தருமம் | .20 |
| 19 | சிவானந்தரின் அருளுரைகள் | .60 |
| 20 | இவ்வாறு அருள்கிறார் சிவானந்தர் | .75 |
| 21 | பக்தி | .20 |
| 22 | பௌத்தம் | .20 |
| 23 | பிரமம் | .20 |
| 24 | அவதாரம் | .20 |
| 25 | முக்கிய உபநிஷதங்களின் சாரம் - பாகம் 1-10 | 2.50 |
| 26 | சுவேதாசுவத உபநிஷத விளக்கம் | .50 |
| 27 | சண்முககவசம் | .50 |
| 28 | சகல கலாவல்லி மாலை | .25 |
| 29 | மதுபானம் விளைவிக்கும் மகா நாசம் | 1.00 |
| 30 | ஸ்ரீ சத்ய சாயி கீதம் | 1.00 |

தபாற்செலவு தனி.

வியாபாரிகட்குத் தகுந்த கமிஷன் உண்டு.

ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி. (இலங்கை)

Registered at the G.P.O. as a Newspaper M. L. 59/300

# சந்தா நேயர்களுக்கு!

அன்புடையீர்!

இறைவன் திருவருளால் ஆத்மஜோதிக்கு 21 ஆண்டுகள் பூர்த்தியாகி 22வது ஆண்டு ஆரம்பமாகி 2-வது இதழ் வெளிவந்துள்ளது. பல சந்தா நேயர்களுடைய ஆதரவினுலேயே ஜோதி மாதந்தோறும் சுடர்விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. வழக்கம்போல் அன்பர்கள் அனைவரும் இவ்வாண்டுச் சந்தாவை அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். சந்தா நேயர்கள் தமது சந்தா இலக்கங்களைக் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

## ஆத்மஜோதி நிலையம்,
## நாவலப்பிட்டி, (இலங்கை)

## சந்தா அதிகரிப்பு

பத்திரிகைக் காகித விலை அதிகரிப்பை முன்னிட்டு நிகழும் கார்த்திகை திங்கள் முதல் 'ஆத்மஜோதி' ஆண்டுச் சந்தா ஐந்து ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது என்பதை அன்பர்களுக்குத் தெரிவிக்கின்றோம். சந்தா நேயர்களும் மற்றும் அன்பர்களும் புதிய சந்தா அதிகரிப்பைக் கவனித்து அனுப்புமாறு வேண்டுகிறோம்.

அச்சிடுவிப்போர்: ஆத்மஜோதி நிலையத்தினர்
அச்சிடுவோர்: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்
வெளியிட்ட திகதி: 15-12-69